26.07.2023
O.S.No. 279/2019

வா. சா. 1 ஜனார்த்தனன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

பாகம் கேட்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்துக்கள் கடந்த 30 வருடங்களாக இ.பி. காலனி என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்து மற்றும் மற்ற சர்வே எண்களில் வீடுகள் கட்டப்பட்டு வெவ்வேறு நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் 2000 ம் வருடத்தில் இறந்தார். அவர் இறக்கும் போது அவருக்கு 75 வயது. என் அப்பாவுடன் உடன்பிறந்தவர் சுப்பையா என்றால் அவர் என் தாத்தா. என் அப்பாவின் அப்பா. 4 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் பெத்து நாயுடு. பெத்த நாயுடுவின் தகப்பனார் பெயர் கொண்டல் நாயுடு. என் அப்பா பெயரில் பட்டா உள்ளதா என்றால் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் 4 வது பாராவில் ராமசாமி பெயரில் பட்டா ஏற்பட்டு நிராட்சேபனையாக அனுபவித்து வருகிறார் என்று பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் பட்டாவோ, கூட்டுப்பட்டாவோ இதுவரையில் இருந்தது கிடையாது என்றாலும் அவரது மூதாதையார் பெயரில் இருந்து வந்தது என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் சொத்தை சுயமாக கிரையம் பெற்று விற்றுள்ளார். 4 முதல் 7 பிரதிவாதி என்னுடைய பங்காளிகள் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் என் பங்காளிகள். சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏ. 86 செண்ட். மேற்படி சொத்தை என் தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் 1 ஏக்கர் 56 செண்டை மட்டும் கிரையம் செய்து கொடுத்தார். அதுபோக மீதி 30 செண்ட் சொத்து என் அப்பாவுடன் உடன் பிறந்தவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் 25.1.1950 ம் வருடம் நாகமநாயுடு என்பவருக்கு ரூ.1000/- ரூபாய்க்கு வாதசாஆ.1 ன்படி 86 செண்ட் சொத்தை கிரையம் செய்து

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மறுபடியும் நாகமநாயுடுவிடம் இருந்து அதே சொத்தை ரூ.200 க்கு 10.5.1950 ம் வருடம் வாதசாஆ.2 மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என் அப்பா அவரது பூர்வீகச் சொத்தை சுயார்ஜித சொத்தாக காட்டுவதற்காக அவருக்கு வேண்டிய நாகமநாயுடு என்பவரிடம் சொத்தை மலரணையாக விற்று வாதசாஆ.1 எழுதி வைத்தும் அதன் பின்னர் சொற்ப விலைக்கு வாதசாஆ.2 ன்படி சொத்தை கிரையம் பெற்றதாக காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் என் தகப்பனார் 22.05.1950 ம் தேதி ஒரு பெருமாள் மாதாரி என்பவருக்கு ச.எண்.576/2 ல் 86 ல் 56 செண்டைவாதசாஆ.4 ன்படி கிரையம் செய்தார் என்றால் சரிதான். பெருமாள் மாதாரி கந்தசாமி (1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார்) என்பவருக்கு அச்சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் ஈடுவைத்து பின்னர் அவருக்கே கிரையம் செய்துவிட்டார். ஈடு வைத்ததை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் கந்தசாமி நாயுடு மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளின் பொது அதிகார முகவர் சுப்பையாவும் சேர்ந்து தாவாச்சொத்து மற்றும் வேறு சில சொத்துக்களையும் வீட்டடி மனைகளாக பிரித்தார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டடி மனைகள் 1985 லேயே பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது என் தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். பொதுவாக வீட்டடி மனைகளாக இடத்தை பிரிக்கும்போது இடத்தை சுத்தம் செய்து சர்வேயர் வைத்து அளந்து கல் ஊன்றி பிரிப்பார்கள் என்றால் சரிதான். அந்தமாதிரி வெளிப்படையாக 1985 ம் வருடத்தில் பிரிக்கும்போது என் தகப்பனார் ஏதேனும் ஆட்சேபனை செய்தாரா என்றால் இல்லை. என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் தகப்பனார் 10, 15 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். உடல்நிலை சரியானபின்னர் என் தகப்பனார் மனையடியாக பிரித்தது தவறு என்றும் தன்னுடைய 30 செண்ட் இடத்தையும் சேர்த்து பிரித்துவிட்டதாக தாவா செய்தாரா என்றால் செய்யவில்லை. என்னிடம் சொன்னார். எப்போது சொன்னார் என்றால் 1988, 1989 ம் வருடத்தில் சொன்னார். அப்போது என் வயது 19 இருக்கும். உண்மையிலேயே என் தகப்பனார் என்னிடம் சொல்லி இருந்தார் அது குறித்து காவல்

நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ தாவா செய்தேனா என்றால் இல்லை. என் தகப்பனார் 1989 லேயே 30 செண்ட் இடம் உள்ள விவரத்தை என்னிடம் சொல்லியதை பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் அதுபோன்று விவரம் என்னிடம் சொல்லவில்லை என்றும், அந்த 30 செண்ட் இடம் வேறு நபருக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் நானோ, என் தகப்பனாரோ, என் குடும்பத்தாரோ இதுவரை எவ்வித ஆட்சேபனையும் செய்யாமல் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் என்னுடைய 30 செண்ட் இடம் எந்த இடத்தில் இருக்கிறது என்று அறுதியிட்டு சொல்ல முடியும். அந்த இடத்தில் பல நபர்கள் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வீடு கட்டி சுமார் 30 வருடம் இருக்குமா என்றால் 1985 ல் கட்டினார்கள். அந்த 30 செண்ட் இடத்தில் வீடு கட்டிய அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். பெருமாள் மாதாரி 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் கந்தசாமி நாயுடுக்கு விற்ற 56 செண்டில் இந்த தாவா 30 செண்ட் வரவில்லை என்றால் சரிதான். கந்தசாமி நாயுடு கிரையம் பெற்ற 56 செண்ட் சொத்தை அவர் உயிருடன் இருக்கும்போதே கிரையம் செய்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தேவையற்ற நபர்கள் என்றும் அவர்களிடம் பணம் பறிக்க 1 முதல் 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பத்திர பதிவு அலுவலகத்தில் தாவா கொடுத்திருந்தேன். அந்த தாவாவில் நிலஅபகரிப்பு மீட்பு தனிப்பிரிவு தாக்கல் செய்த விசாரணை அறிக்கையில் கந்தசாமி நாயுடு உயிருடன் இருக்கும்போதே மேற்படி 56 செண்ட் நிலத்தையும் வேறு நபர்களுக்கு விற்கு மனைகளாக பிரிக்கப்பட்டுவிட்டதாகவும் தற்போது எதிர்மனுதாரர்களிடம் மனுதாரர் கோரும் 30 செண்ட் நிலம் எதுவும் இல்லை என தெரியவருகிறது என சொல்லி உள்ளார் என்றால் சரிதான். (வா.தசாஆ.21). 30 செண்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ள நபர்களை தரப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கு எதிராக வழக்கு போடாமல் தேவையற்ற நபர்களை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி

செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 30 செண்ட் நிலம் எங்கு உள்ளது என்று தெரிந்துகொண்டே 1 முதல் 3 பிரதிவாதிகள் நல்ல வசதி வாய்ப்புடன் இருப்பதால் அவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் கந்தசாமி அவரது காலத்திலேயே கிரையம் பெற்ற சொத்தை விற்று விட்டதால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அச்சொத்தில் எவ்வித உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. நான் பிராதில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பெருமாள் மாதாரியும், நானும் சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தோம் என்று காட்டுவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே கூட்டு அனுபவத்தில் இல்லாமல் கூட்டு அனுபவத்தில் இருப்பது போன்று குறைந்த நீதிமன்றக் கட்டணம் செலுத்தியது தவறு என்றாலும் சரியல்ல.

**1** மற்றும் **2** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:-**

3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18,19 ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.07.26 17:42:44 +0530

Principal District Judge,
Dindigul.